# January Month Activity Report –

# International year of Cooperatives 2025

| Criteria | Details |
|---|---|
| Sector | Cooperative Department |
| Level | State level |
| Event/Activity Name | State-Level Inaugural Event |
| Brief Information on the Activity | • A comprehensive meeting was conducted on January 17, 2025, to outline the objectives and activities planned for the year, emphasizing the theme "Cooperatives Build a Better World."<br>• On the occasion of the inaugural event of International Year of Cooperatives 2025 held at Chennai, registration certificate issued to newly formed Narikuravar (tribal community of Tamil Nadu) Society, various schemes launched for the welfare of cooperative members - Vergal and employees - Vizhudhugal, Self-help groups, transgender – Siragugal and also newly constructed cooperative buildings opened. |
| Objective | The objective of the newly formed society is to encourage the participation of Narikuravar (an tribal group of Tamil Nadu) and transgender individuals in the cooperative sector for their economic and social empowerment. The primary objective of this event is to educate transgender individuals and tribal women about government schemes and corporate opportunities for sustainable development and inclusive growth. |

| | |
|---|---|
| No. of Participants | 1500 |
| Achievements & Outcomes | In this event Madhura college, Head of the Department, Commerce Department, Dr. Mayil Murugan speaks about “Strengthening Sustainable Inclusive Cooperatives”.<br>Women Transgender and tribal’s are participated around 1500 across the State of Tamil Nadu. Expert Professors and Corporate leaders shared valuable details on Cooperatives, Financial Independence, Leadership. Encouraged participants to establish and join Cooperative movement for their economic growth. |
| Photographs & AV Content |    |
| Additional Remarks | - |

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்



# வேர்கள்

## கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் நலநிதி

கூட்டுறவு இயக்கத்திற்கு வேர்கள் போன்று ஆதாரமாக இருக்கும் அனைத்து கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலன் பேணும் வகையில் உறுப்பினர் நலநிதி உருவாக்கப்பட்டு **"வேர்கள்"** திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



# நோக்கம்

- சங்க உறுப்பினர்கள், குடும்ப உறுப்பினர்கள் நலன் காக்கும் வகையில் மருத்துவம், கல்வி, திருமண நிதியுதவி அளித்து சங்கங்கள் மீது பிணைப்புடன் இருந்து அதன் வளர்ச்சியில் ஈடுபாட்டுடன் இருத்தல்




## திட்டத்தில் எப்படி சேர்வது?

- அனைத்து கூட்டுறவு சங்கங்களின் தனி நபர் உறுப்பினர் ரூபாய் 100 மாத சந்தா செலுத்தி சேரலாம் பதிவாளர் அலுவலக வலைத்தளம் பக்கத்தில் கைபேசி எண் பதிந்து **OTP** வாயிலாக உள் நுழைவு செய்து உறுப்பினர் விவரங்களை பதிவு செய்யும் வசதி.

# திட்டத்தின் பயன்கள்



உறுப்பினர் இயற்கை
மரணம் எய்தினால்
**ரூ.50,000**



விபத்து மரணம் அடைந்தால்
**ரூ.1,00,000**



முழு உடல்ஊனம் அடைந்தால்
**ரூ.50,000**



பகுதி உடல்
ஊனம் அடைந்தால்
**ரூ.25,000**



இரு குழந்தைகளின்
கல்விச் செலவு தலா
**ரூ.10,000**



இரு பெண் குழந்தைகளின்
திருமணச் செலவு தலா
**ரூ.10,000**

**உறுப்பினர் எந்த நிதி பயனும் பெறாதவராக இருந்தால் செலுத்திய சந்தா தொகைக்கு ஏற்ப ரூ. 7500 முதல் ரூ. 1லட்சம் வரை நிதி பயன் பெறலாம்**

# எவ்வாறு நிதி உதவி பெறுவது?



உறுப்பினர் / உறுப்பினரின் நியமனதாரர், மரணம் / விபத்து தொடர்பான அனைத்து ஆவணங்களையும் **RCS Portal** வழியாக கைபேசி **OTP** வாயிலாக பதிவு செய்தல்.

**RCS Portal வாயிலாக சங்க நிர்வாகத்தால் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு சரக துணைப்பதிவாளர் மற்றும் மண்டல இணைப்பதிவாளருக்கு மேலனுப்பி பதிவாளர் தலைமையிலான மாநிலக் குழுவால் நிதியுதவி வழங்கப்படும்.**





# விழுதுகள்

## கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் நலநிதி

கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தும் விழுதுகளாய் திகழும் அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் நலன் பேணும் வகையில் பணியாளர் நல நிதி உருவாக்கப்பட்டு "**விழுதுகள்**" திட்டம் செயல்படுத்தப்படுகிறது.





# நோக்கம்

- கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு மருத்துவ உதவி, அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி, திருமணம் சார்ந்த நிதியுதவி அளித்தல்.
- பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் மீது ஈடுபாட்டுடனும், ஊக்கத்துடனும் பணியாற்ற வகை செய்தல்.




## பதிவு செய்தல்

- அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் **ரூ.300/** செலுத்தி இத்திட்டத்தில் சேரலாம்.
- **http://rcs.tn.gov.in/rcsweb/welfare/login** என்ற பதிவாளர் அலுவலக வலைத்தளபக்கத்தில் பக்கத்தில் கைபேசி எண் வாயிலாக **OTP** பெற்று உள்நுழைவு செய்யலாம்.
- சுயவிவரங்களைப் பதிவு செய்தவுடன் சங்கத்தினால் விவரம் சரிபார்க்கப்பட்டு சரகதுணைப் பதிவாளர் /மண்டல இணைப்பதிவாளர் அவர்களால் உறுதிசெய்த உறுப்பினராகப் பதிவுசெய்யும் வசதி

# விழுதுகள் திட்டத்தின் பயன்கள்

## I



திட்டத்தின் உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால்

**ரூ.1.00இலட்சம்**

## II

விபத்து மரணம் எய்தினால்

**ரூ.5.00இலட்சம்**





## III



விபத்தில் முழு உடல் ஊனம் அடைந்தால்

**ரூ.2.50இலட்சம்**



## IV

விபத்தில் பகுதி உடல் ஊனம் அடைந்தால்

**ரூ.1.50இலட்சம்**





## V

இரு குழந்தைகளின் கல்விச் செலவு தலா

**ரூ.25,000**



## VI


இரு பெண் குழந்தைகளின் திருமணச் செலவு தலா

**ரூ.25,000**




**திட்டத்தின் உறுப்பினராகி எந்த நிதிப்பயனும் பெறாதவர்களுக்கு ரூ.25,000/.**

# நிதியுதவி பெறுதல்



உறுப்பினர் / உறுப்பினரின் நியமனதாரர், மரணம் / விபத்து தொடர்பான அனைத்து ஆவணங்களையும் **RCS Portal** வழியாக கைபேசி **OTP** வாயிலாக பதிவு செய்தல்.

**இணைய வாயிலாக சங்க நிர்வாகத்தால் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு சரக துணைப்பதிவாளர் மற்றும் மண்டல இணைப்பதிவாளருக்கு மேலனுப்பி பதிவாளர் தலைமையிலான மாநிலக் குழுவால் நிதியுதவி வழங்கப்படும்.**



# ‘சிறகுகள்’

**மூன்றாம் பாலினத்தோருக்கான சிறப்புக்கடன் திட்டம்**



சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மாற்றுப்பாலினத்தவர்கள், அவர்தம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படை நிதிச் சேவைகளைப் பெறுவதில் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பொருளாதார ரீதியான அவர்களின் உள்ளடக்கத்தை உறுதி செய்யும் உன்னத திட்டம் ‘சிறகுகள்‘ சிறப்புக்கடன் திட்டம்



## சிறப்பம்சங்கள்

- 5% என்ற அளவிற்கு குறைந்த வட்டியே வசூலிக்கப்படுகிறது.
- சுயதொழில் மற்றும் சிறுவணிகம் போன்ற தேவைகளுக்கு கடன்.
- எளிய நடைமுறைகள்.
- தனிநபருக்கும், சுயஉதவிக் குழுக்களுக்கும் கடன்.
- கடனை அடைத்த பிறகு மறுநாளே மீண்டும் கடன் பெறலாம்.



# சிறப்புக்கடன் திட்டம்.

### கடனளவு

குறைந்த பட்சம் ரூ.5,000 முதல் அதிகபட்சம் ரூ.1,00,000 வரை. அதிகபட்சம் 36 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம்

## கடன் வழங்கும் நிறுவனங்கள்

மாநிலத்தின் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளில் இக்கடன் வழங்கப்படும்.

**தகுதி**

- மாற்றுப் பாலினத்தவராக இருத்தல் வேண்டும்.
- வங்கிக்கிளை செயல்படும் பகுதியில் சுயதொழில் அல்லது சிறுவணிகம் செய்பவர்கள் மற்றும் செய்ய முன் வருபவர்கள்.
- குறைந்தபட்சம் 18 வயதுமுதல்அதிகபட்சம் 70 வயதுவரை (கடனை திருப்பிச் செலுத்தும் காலம் உட்பட).
- இரு தனி நபர் பிணையம் அளித்தல் வேண்டும்.
- இந்திய ரிசர்வ் வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட KYC ஆவணங்கள்.
- சமூக நலத்துறையால் வழங்கப்படும் அடையாள அட்டை.



## எய்தும் நன்மைகள்

- குறைந்த வட்டியில் கடனுதவி.
- கந்து வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து விடுதலை.
- சொந்தக்காலில் நிற்பதற்கான தன்னம்பிக்கை.
- பொருளாதார தற்சார்பு.
- சமூக அங்கீகாரம்.

